## செயலாளர் நாயகம்

--

### சர்வதேச பெண்கள் தினத்தை முன்னிட்ட வீடியோ செய்தி
### 2022 மார்ச் 8

On International Women's Day, we celebrate women and girls everywhere.

சர்வதேச பெண்கள் தினத்தில், நாம் எங்குமுள்ள பெண்கள் மற்றும் சிறுமிகளைக் கொண்டாடுகின்றோம்.

We celebrate their contributions to ending the COVID-19 pandemic.
கொவிட் 19 பெருந்தொற்றை ஒழிப்பதற்கான அவர்களது பங்களிப்புகளை நாம் பாராட்டுகின்றோம்.

Their ideas, innovations and activism that are changing our world for the better.
அவர்களது சிந்தனைகள், புத்தாக்கங்கள் மற்றும் செயற்பாடுகள் எமது உலகை மேலும் சிறப்பாக மாற்றுகின்றன.

And their leadership across all walks of life.
வாழ்வின் அனைத்து நிலைகளிலும் அவர்களது தலைமைத்துவமும் அவ்வாறே.

But we also recognize that in too many areas, the clock on women's rights is moving backwards.
எனினும், பல துறைகளில் பெண்களின் உரிமைகள் குறித்த கடிகாரம் பின்னோக்கி சுழல்வதை எம்மால் இனங்காண முடிகின்றது.

The pandemic has kept girls and women out of schools and workplaces.
பெருந்தொற்றானது பாடசாலைகள் மற்றும் வேலைத்தளங்களில் இருந்து பெண்களை தள்ளி வைத்துள்ளது.

They face rising poverty and rising violence.
அதிகரிக்கும் வறுமைக்கும் வன்முறைக்கும் அவர்கள் முகங்கொடுக்கிறார்கள்.

They do the vast majority of the world's unpaid but essential care work.
உலகின் ஊதியம் தரப்படாத ஆனால் அத்தியாவசியமான பராமரிப்பு வேலைகளில் அதிகளவை அவர்களே செய்கிறார்கள்.

They're targets of violence and abuse, just because of their gender.
அவர்களது பாலினம் காரணமாக மாத்திரம் வன்முறை மற்றும் துஷ்பிரயோகத்தின் இலக்காக அவர்கள் உள்ளார்கள்.

In all countries, women are scandalously under-represented in the halls of power and the boardrooms of business.
அனைத்து நாடுகளிலும், அதிகார பீடங்கள் மற்றும் வணிக நிர்வாக சபைகளில் முறையற்ற மிகக்குறைந்த பிரதிநிதித்துவத்தைக் கொண்டிருக்கிறார்கள்.

And as this year's theme reminds us, they bear the brunt of climate change and environmental degradation.
காலநிலை மாற்றம் மற்றும் சுற்றுச்சூழல் சீர்கேட்டின் ஆரம்பத் தாக்கத்தை அவர்கள் சுமப்பதாக இவ்வருடத்தின் கருப்பொருள் எமக்கு நினைவுபடுத்துகிறது.

Starting now, on International Women's Day, it's time to turn the clock forward for every woman and girl.
உலக பெண்கள் தினத்தில், இப்பொழுது முதல், இது ஒவ்வொரு பெண்ணினதும் சிறுமியினதும் உரிமைகளை சீரமைப்பதற்கான நேரம்.

Through guaranteeing quality education for every girl, so they can build the lives they want and help make the world a better place for us all.

ஒவ்வொரு சிறுமியும் தரமான கல்வியைப் பெறுவதற்கு உத்தரவாதமளிப்பதன் ஊடாக, அவர்கள் தமக்கு தேவையான வாழ்க்கையை அமைப்பதோடு எம் அனைவருக்குமாக இவ் உலகை மேம்படுத்த உதவுவர்.

Through massive investments in women's training and decent work.
பெண்களது பயிற்றுவிப்பு மற்றும் நியாயமான தொழில்களில் பாரிய முதலீடுகளை மேற்கொள்வதன் ஊடாக

Through effective action to end gender-based violence.
பாலின அடிப்படையிலான வன்முறையை ஒழிப்பதற்கான செயற்திறன்மிக்க நடவடிக்கைகளின் ஊடாக

Through bold action to protect our planet.
எமது புவியைப் பாதுகாக்கும் துணிச்சலான செயற்பாடுகளின் ஊடாக

Through universal care that is fully integrated into social protection systems.
சமூக பாதுகாப்பு முறைமைகளோடு முழுமையாக ஒருங்கிணைக்கப்பட்ட உலகளாவிய பாராமரிப்பின் ஊடாக

And through targeted measures like gender quotas so we can all benefit from women's ideas, experience and leadership everywhere decisions are made.

அத்துடன் பாலின எண்ணிக்கை போன்ற இலக்கு அளவீடுகளின் ஊடாக, பெண்களின் சிந்தனைகள், அனுபவம் மற்றும் தலைமைத்துவத்தின் நலன்களை தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும் அனைத்து இடங்களிலும் எம்மால் பெற்றுக்கொள்ள முடியும்.

Gender inequality is essentially a question of power, in a male-dominated world and a male-dominated culture. Power relations must be reversed.
ஆண்களின் ஆதிக்கத்தாலான உலகம் மற்றும் ஆண்களின் ஆதிக்கத்தாலான கலாசாரத்தில், பாலின சமத்துவமின்மையானது முக்கியமான அதிகாரம் குறித்த கேள்வி. அதிகார தொடர்புகள் மீளமைக்கப்பட வேண்டும்.

At the United Nations, we've achieved gender parity in senior management at headquarters and around the world — improving our work and better representing the communities we serve.

ஐக்கிய நாடுகள் நாம், தலைமை அலவலகம் மற்றும் உலகம் முழுவதிலுமுள்ள சிரேஷ்ட முகாமைத்துவத்தில் பாலின சமத்துவத்தை எட்டியுள்ளோம் - எமது செயற்பாடுகளை மேம்படுத்துவதோடு நாம் சேவையாற்றும் சமூகங்களது பிரதிநிதித்துவத்தையும் முன்னேற்றுகின்றோம்.

We need more women environment ministers, business leaders and presidents and prime ministers. They can push countries to address the climate crisis, develop green jobs and build a more just and sustainable world.

எமக்கு மென்மேலும் பெண் சுற்றுச்சூழல் அமைச்சர்கள், வணிகத் தலைவர்கள், ஜனாதிபதிகள் மற்றும் பிரதம அமைச்சர்கள் தேவை. அவர்கள் காலநிலை சீர்கேடு குறித்து நடவடிக்கை எடுக்குமாறு நாடுகளுக்கு வலியுறுத்துவதோடு, பசுமைத் தொழில்களை விருத்தி செய்து, நியாயான நிலைபேறான ஓர் உலகைக் கட்டியெழுப்புவர்.

We cannot emerge from the pandemic with the clock spinning backwards on gender equality.
பாலின சமத்துவம் குறித்த கடிகாரத்தை பின்னோக்கி சுழற்றி எம்மால் பெருந்தொற்றிலிருந்து மீளெழ முடியாது.

We need to turn the clock forward on women's rights.
பெண்களின் உரிமைகள் குறித்து நாம் முன்னேற்றகரமாக செயற்பட வேண்டும்.

The time is now.
அதற்கான தருணம் இதுவே.

***